1972 மார்ச் 6] [பேரவைத் தலைவர்]

மையச் சிறைக் கண்காணிப்பாளர் சரியானபடி அறிந்து கொள்ளாத காரணத்தால்தான் இத் தவறு ஏற்பட்டுள்ளது என்று தெரிய வருகிறது. மையச் சிறைக் கண்காணிப்பாளர் தாம் கொடுக்கும் தகவல் சரியானதுதான் என்று கருதித்தான் அச் செய்தியை அளித்திருக்கிறார் என்பதும், அது தவறான செய்தி என்று தெரிந்தும் வேண்டுமென்றே கொடுக்கப்பட்ட ஒன்று அல்ல என்பதும் இவ்விளக்கங்களினால் தெரிய வருகிறது.

தவறான தகவலைப் பேரவைக்குக் கொடுப்பது எப்படி, எப்போது அவை உரிமையை மீறிய செயலாகும் என்பது குறித்து இப்பேரவையிலும், நாடாளுமன்றத்திலும் பல முறைகள் விளக்கப்பட்டுள்ளது. பாராளுமன்ற நடைமுறைகள் குறித்து "Sir Erskine May" அவர்கள் எழுதியுள்ள புத்தகத்திலும், "The House may treat the making of a deliberately misleading statement as a contempt" என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

எனவே, இங்கு சென்னை மையச் சிறைக் கண்காணிப்பாளர் தாம் கொடுக்கும் தகவல் தவறானது என்று அவருக்குத் தெரிந்திருந்தும், இப் பேரவைக்குத் தவறான தகவல் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு இத் தகவலைக் கொடுத்தார் என்று கூறுவதற்கான எந்தவிதமான ஆதாரமும் இல்லாத காரணத்தினால் இதில் அவையுரிமை மீறல் எதுவும் இல்லை என்று நான் தீர்ப்பளிக்கிறேன்.

ஆயினும், இம்மாதிரி தகவல்கள் கொடுக்கும்போது அரசு அதிகாரிகளும், மற்றவர்களும் மிகுந்த கண்காணிப்புடனும், முன் னெச்சரிக்கையுடனும் இருக்க வேண்டும் என்றும், இத்தகைய தவறு ஏற்பட இடம் அளிக்காமல் இருக்க வேண்டும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(3) ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்.

பல்வேறு பொருள்கள் குறித்து உறுப்பினர்கள் கொடுத்துள்ள தீர்மானங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் ஒற்றிவைப்புத் தீர்மானங்களைக் கொண்டுவர முன்னறிவிக்கைகளைக் கொடுத்திருக்கிறார்கள். கடந்த பிப்ரவரித் திங்களில் நடந்த பல நிகழ்ச்சிகளைப் பற்றியும், இன்னும் பல்வேறு

பொருள் பற்றியும் தீர்மானங்கள் இருக்கின்றன. யார் யார், எந்த எந்தப் பொருள் பற்றித் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை நான் படித்து விடுகிறேன்.

List of Adjournment Motions.

Serial number and name of the member.	Subject.
1. Thiru K. T. K. Thangamani Thiru Manali C. Kandasamy	Manhandling of Communist Leader Thiru Mangalasamy on 19—2—1972 at Mandapam.
2. Thiru Manali C. Kandasamy	Proposed strike by workers of Sugar Industry.
3. Thiru A. K. Subbiah Thiru S. Vadivelu	Plight of the agriculturists in Tamil Nadu due to the compulsory collection of loans.
4. Thiru A. K. Subbiah	Eviction of tenants from their lands due to non-payment of dues in Thanjavur District.
5. Thiru R. Ponnappa Nadar	Trespass by unruly elements into the Southern Railway Employees Union and attack on Thiru Mahalingam, a labour leader of the Railway Workers Union on 23-2-72.
6. Thiru S. Alagarswamy	Proposed closure of match factories.
7. Thiru R. Ponnappa Nadar Thirumathi T. N. Anandanayaki.	Assault on student congress leaders Thiru V. Dhandayuthapani and Thiru Kudanthai Ramalingam after the Presidency College Union Elections.

Serial number and name of the member.	Subject.
8. Thiru K. T. K. Thangamani	Death in the Police lock-up at Namakkal, Salem District on 26–2–1972 of a prisoner by name Chinnappan and the consequent unrest in that area.
9. Thiru N. Marudachalam	Strike by 10,000 workers of Ayyarpadi Tea Estate in Coimbatore for the past one week.
10. Thiru A. Pauliah Thiru J. James	Death of Thiru Velappan of Perungodu village in the lock-up at Eranial Police Station in Kanyakumari District.
11. Thiru S. Alagarswamy	Increase in the price of yarn and non-availability of yarn in Koilpatti Taluk in Tirunelveli District and the consequent unemployment of weavers in that taluk.
12. Thiru. N. V. Guruswamy	Crisis due to non-availability of yarn to thousands of weavers in Sakkampatti, T. Subbulapuram in Andipatti.
13. Thiru S. Vadivel	Assault and seizure of Rs. 27 from the Road Inspector of Highways Department on 4–2–1972 at Gudalore by two Sub-Inspectors while the former was taking salary for disbursement to Government employees.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

Serial number and name of the member.	Subject.
14 Thiru N. Marudhachalam	Failure to take action by the Pothanur Police Sub Inspector in a murder case in Kuruchi village in Coimbatore District.
15. Thiru K. T. K. Thangamani	Police lathi charges on the Textile Workers' Procession on 1-3-1972 in Gudiyatham, North Arcot District.
16. Thiru J. James	Bus accident at Thallapuram near Chingleput on the night of 3-3-1972.

இந்தத் தீர்மானங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பல நிகழ்ச்சிகள் பற்றியெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள், நிதிநிலை அறிக்கையின் பொது விவாதத்தின் மீதும், மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தின் போதும் நிதி ஒதுக்கிடு மசோதாவின் மீதான விவாதத்தின் போதும் விவரமாகப் பேசுவதற்குப் போதுமான வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே, இந்த ஒற்றிவைப்புத் தீர்மானங்களைப் பற்றி விவாதிக்க வேண்டிய அவசியமில்லையென்று கருதி, இவற்றைக் கொண்டு வருவதற்கான அனுமதி மறுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(4) அறிவிப்பு

பேரவை அலுவல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 4-3-1972-ம் நாள் நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் எடுத்த முடிவிற்கிணங்க 1972—73-ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பிற்காக ஒதுக்கப்பட்ட முதல் நான்கு நாட்களின் விவரம் ஏற்கனவே உறுப்பினர்களுக்கு அச்சிட்டு அனுப்பியுள்ளவாறு நடைபெறும்.